<u>தொழிலாளர் நீதிமன்றம். காஞ்சிபுரம்</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **ID.No.** | **:** | 251/2019 | சாட்சியம் | **:** | **WW3** |
| **Name** | **:** | ஆனந்தராஜ் | | | |
| **Date** | **:** | **16.12.2024** | | | |
| **Time** | **:** | **12.28 p.m to 12.56 p.m** | | | |

<u>தொ.த.சா.**3.**திரு. ஆனந்தராஜ் என்பவர் இன்று ஆஜர் செய்யப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார். குறுக்கு விசாரணை</u>

நான் தற்சமயம் குவாலிட்டி டிபார்ட்மெண்டில் உள்ளேன். இந்த வழக்கில் எத்தனை டீம் லீடர் சம்மந்தப்பட்டு உள்ளனர் என்றால் 24 பேர். நான் 15 ஆண்டுகளாக எதிர்மனுதாரர் நிர்வாகத்தில் வேலை பார்க்கிறேன். எனக்கும் என்னுடைய மேல் அதிகாரிகளுக்கும் சக ஊழியர்களுக்கும் இடையே சுமூக உறவு உள்ளது எந்தவித பிரச்சனையும் இல்லை. வழக்கு தாக்கல் செய்த சமயத்தில் 32 பேர் தரப்பினர்களாக இருந்தார்கள் என்றாலும் அதில் 9 பேர் தவிர மற்றவர்கள் மட்டுமே வழக்கு நடத்தி வருகிறார்கள் என்றால் மொத்தம் 24 பேர் நான் உள்பட நடத்தி வருகிறோம். நான் ஆரம்பத்தில் அசெம்பிளில் இருந்தேன் என்றால் ஆமாம். அசெம்பிளில் எட்டு செல் இருக்கும் என்றால் இல்லை ஆறு செல்கள் தான் இருக்கும். ஒவ்வொரு செல்லிற்கும் ஒவ்வொரு டீம் லீடர் இருப்பார் என்றால் சில சமயங்களில் இரண்டு செல்லுக்கும் சேர்த்து

ஒரு டீம் லீடர் கூட இருப்பார். நான் எத்தனை செல் இருக்கு டீம் லீடராக இருந்தேன் என்றால் ஒரு செல்லிற்கு டீம் லீடராக இருந்தேன். நான் அவ்வாறு டீம் லீடராக இருக்கும் சமயத்தில் சூப்பர்வைசர் சொன்னதால்தான் டீம் லீடராக இருப்பேன் அதுவும் லைனில் வேலை செய்து கொண்டேதான் டீம் லீடர் வேலையும் செய்வேன். என்னை டீம் லீடராக இருக்க செல்லும் சூப்பர்வைசர் வேல்யூஸ் டீம் லீடரா என்றால் இல்லை எக்ஸிக்யூட்டிவ் ஆவர். அந்த எக்ஸிக்யூட்டிவ் ஆனவர் செல்லிற்கு வருவார்கள் என்றால் அங்கும் வருவார்கள் ஆபீசிலும் இருப்பார்கள். ஒரு செல்லிற்கு மொத்தம் ஐந்து ஆப்ரேட்டர்கள் இருப்பார்கள். எனக்கு கம்பெனியில் மெயில் ஐ.டி கொடுத்துள்ளார்கள் என்றால் ஆமாம். அந்த மெயில் ஐ.டி சரியாக நினைவில்லை. நான் அசம்பிளி செக்ஷனில் வேலை பார்த்த காலகட்டத்தில் லாக் புக் பராமரிக்கப்பட்டு வந்தது என்றால் ஆமாம். அன்றைய வேலை சம்மந்தமாக லாக் புக்கில் எழுதி இருப்பேன் அதை எக்ஸிக்யூட்டிவ் பார்ப்பார்கள். தற்சமயம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் 93 ஆபரேட்டர்கள் பணியில் இருக்கிறார்கள் என்றால் தெரியாது. Naps பயிற்சியாளர்கள் சுமார் 50 பேர் இருந்தார்கள் என்றால் தெரியவில்லை. 93 ஆப்பரேட்டர்களும் தொழிற்சங்கத்தில் உறுப்பினராக இருக்கிறார்கள் என்றால் எத்தனை பேர் இருக்கிறார்கள் என்று தெரியாது. ஆபரேட்டர்கள் உறுப்பினர்களாக இருக்கிறார்கள் மேலும் 24 டீம் லீடர்களும் கூட உறுப்பினர்களாக உள்ளோம். 2012, 2015, 2017, 2020 ஆண்டுகளில் நிர்வாகம் 12(3) செட்டில்மெண்ட் மனுதாரர் சங்கத்துடன் ஏற்படுத்தியது என்றால் 2015 ஆம் ஆண்டு

ஏற்படுத்திய விவரம் தெரியும். அந்த ஒப்பந்தம் முன்னிலைக்கு தான் ஆபரேட்டர்களுக்கு இரண்டு ஆண்டு, மூன்றாண்டு என பயன்கள் வழங்கப்பட்டு வருகின்றன என்றால் தெரியாது. 2015 ஆம் ஆண்டு முதல் 2020 வரை ஏற்படுத்திய 12(3) செட்டில்மென்ட் அடிப்படையில் டீம் லீடர்களுக்கு பணப்பயன்கள் வழங்கப்படுவது இல்லை. எதன் அடிப்படையில் வழங்கப்பட்டு வருகிறது என எனக்கு தெரியாது ஆனால் தொழிற்சங்கம் நிர்வாகத்துடன் பேசி தான் இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை இன்கிரிமெண்ட் வழங்கப்பட்டு வருகிறது. டீம் லீடர்ஸ் வருடா வருடம் பி.டி.பி அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என்றால் ஆமாம். டீம் லீடர்ஸ்க்கு எப்போது இன்கிரிமெண்ட் வழங்கப்படும் என்றால் ஒவ்வொரு வருடமும் குறிப்பிட்ட மாதத்தில் வழங்க மாட்டார்கள் சில வருடங்கள் மார்ச்சிலும் சில வருடங்கள் டிசம்பரிலும் வழங்குவார்கள். 2024 ஆம் ஆண்டிற்கான PDP அறிக்கை நான் தாக்கல் செய்து விட்டேனா என்றால் இல்லை அவ்வாறு தாக்கல் செய்யாத காரணத்தினால் தான் எனக்கு இந்த ஆண்டிற்கான இன்கிரிமெண்ட் வழங்கப்படவில்லை என்றால் இன்கிரிமெண்ட் சம்பந்தமாக பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறது PDP அறிக்கை தாக்கல் செய்யாத காரணத்தினால் தான் வழங்கப்படவில்லை என்பது பற்றி எனக்கு தெரியவில்லை. எப்பொழுதிலிருந்து டீம் லீடர் வேலையை பார்த்து வருகிறேன் என்றால் 22.07.2014 முதல். என்னுடைய சம்பளத்தில் மாதாமாதம் எனக்கு டீம் லீடர்ஸ் அளவன்ஸ் ரூபாய்.5000/- வழங்கப்பட்டு வருகிறது என்றால் ஆமாம். Production Hourly Output பற்றி தினமும்

சொல்ல வேண்டும் என்றால் நாங்கள் லைனில் வேலை செய்து கொண்டிருக்கும் பொழுது ஒவ்வொரு மணி நேரத்திற்கும் சூப்பர்வைசர்கள் வந்து எங்களிடம் கேட்பார்கள் நாங்கள் அதை விவரத்தை சொல்வோம் அவர்கள் தான் எழுதி கொள்வார்கள். Production Reporting, Breaking Reporting. Shift Scheduling ஆகியவற்றை நான் ஈமெயில் மூலமாக வி.எஸ்.எல் அவர்களுக்கு அனுப்புவேன் என்றால் இல்லை. ஈமெயிலை பார்த்தால் யார் அனுப்பியது என்ற விவரம் தெரியவரும் என்றால் நான் ஈமெயில் எதுவும் அனுப்பியது இல்லை. என்னுடைய ஈமெயில் ஐ.டி பயன்படுத்தி யார் மெயில் அனுப்புவார்கள் என்றால் மெயில் அனுப்புவதற்கான நேரமே கிடைத்தது இல்லை எப்பொழுதும் வேலை செய்து கொண்டு தான் இருப்போம். தொ.சா.ஆ.9 ல் டீம் லீடர்களுக்கும் அந்த ஒப்பந்தம் பொருந்தும் என சொல்லப்பட்டுள்ளதா என்றால் எனக்கு தெரிந்து அவ்வாறு சொல்லப்படவில்லை.

தொடர்ச்சி வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது.

S SUJATHA

Presiding Officer, Labour Court
Digitally signed by S SUJATHA
Location: Kancheepuram
Date: 2024.12.20 18:38:48 +0530

Presiding Officer,
Labour Court, Kancheepuram.
Dated:16.12.2024.